பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
22 01 2025 **WEDNESDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தொலைத்தொடர்பு துறையில் இந்தியா புரட்சிகரமான மாற்றத்தை கண்டுள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.
2. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோர் முக்கியப் பங்கு வகிப்பார்கள் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்
3. மகாகும்பமேளாவை ஒட்டி உத்தரபிரதேச அமைச்சரவையின் சிறப்புக் கூட்டம், இன்று பிரயாக்ராஜில் நடைபெற்றது.
4. தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் நாளை முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிடவுள்ளதாக கூறியுள்ளார்.
5. பெங்களூரு சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Sahaja Yamalapalli** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<>>>>>>

தொலைத்தொடர்பு துறையில் இந்தியா புரட்சிகரமான மாற்றத்தை கண்டுள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

இன்று புதுதில்லியில் பாதுகாப்பு கணக்கு மற்றும் தொலைத்தொடர்பு சேவை அதிகாரிகளிடையே உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

பாதுகாப்பு கணக்கு சேவை அதிகாரிகள் கூடுதலாக தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

பாதுகாப்புப் படைகளுக்கான நிதி மேலாண்மையை வலுப்படுத்துவதில் இந்த அதிகாரிகளின் பங்கு இன்றியமையாதது என்று அவர் கூறினார்.

தொலைத்தொடர்பு துறையின் மேம்பாட்டிற்காக கூடுதல் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் அதிகாரிகள் பணியாற்ற வேண்டும் என்றும் திருமதி. திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டார்.

<<<<<<>>>>>>

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை ஆம் ஆத்மி அரசு நிறைவேற்றவில்லை என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

தில்லி சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி, பிஜேபியின் வாக்குச்சாவடி முகவர்களோடு காணொலி வாயிலாக அவர் கலந்துரையாடினார்.

தோல்வி பயம் காரணமாக தினசரி புதுப்புது வாக்குறுதிகளை ஆம் ஆத்மி அறிவித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

பிஜேபி-யின் தேர்தல் அறிக்கையை கட்சியினர் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

வாக்காளர்கள் அதிக எண்ணிக்கையில் வாக்களிப்பதை பிஜேபி வாக்குச்சாவடி முகவர்கள் உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை தில்லி அரசு செயல்படுத்தவில்லை என்றும் திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டினார்.

<<<<<<>>>>>>

இதற்கிடையே, மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் நடுத்தர வர்க்கத்தின் நலனுக்கான அறிவிப்புகள் இடம்பெற வேண்டும் என்று ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் அறிவுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், ஆம் ஆத்மி அரசு நடுத்தர வர்க்கத்தின் நலனுக்காக கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருவதாக கூறினார்.

தில்லியின் மேம்பாட்டிற்காக ஆம் ஆத்மி அரசு நிறைவேற்றிய திட்டங்களையும் பட்டியலிட்டு திரு. அரவிந்த் கெஜ்ரிவால் வாக்கு சேகரித்தார்.

இந்நிலையில், பஞ்சாப் மாநில அரசு வாகனங்களை ஆம் ஆத்மி கட்சி பிரச்சாரத்திற்கு பயன்படுத்துவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

இது தேர்தல் நடத்தை நெறிமுறைகளை மீறியதாகும் என்றும் அக்கட்சி கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோர் முக்கியப் பங்கு வகிப்பார்கள் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

கேரள மாநிலம் ஆலப்புழாவில் ராணுவப் பள்ளியை திறந்து வைத்து அவர் பேசினார்.

கல்வியோடு உடற்பயிற்சிக்கும் இப்பள்ளியில் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதன் மூலம் இந்தப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் ராணுவத்தில் எளிதில் சேர்வதற்கான வாய்ப்பு கிடைப்பதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் வளர்ச்சியில் கல்வி மற்றும் ராணுவம் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பாரம்பரிய விளையாட்டு போட்டிகளுக்கு ஊக்கமளிக்கப்படுவதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில், உலக கோகோ கோப்பையை வென்ற இந்திய அணியினருடன் அவர் கலந்துரையாடினார்.

ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்திய அணியினர் இந்த கோப்பையை வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

விளையாட்டு வீரர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>>**

தெலங்கானாவில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான அதிநவீன தரவு மையத்தை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் சர்வதேச நிறுவனத்துடன் அம்மாநில அரசு கையெழுத்திட்டுள்ளது.

**Davos-**ல் நடைபெற்று வரும் உலக பொருளாதார அமைப்பின் கூட்டத்திற்கு இடையே இந்த ஒப்பந்தம் கையெழுத்தானதாக தெலங்கானா அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

10 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் இந்த மையம் அமைக்கப்படவுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் புதிதாக 3 ஆயிரத்து 600 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>>**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் வெகு விமரிசையாக நடைபெற்றுவரும் மகா கும்பமேளாவில் புனித நீராடி வருவோரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

சுற்றுலா பயணிகள் மற்றும் பக்தர்களின் வசதிக்காக நாள்தோறும் பல்வேறு நடவடிக்கைகளை மத்திய – மாநில அரசுகள் மேற்கொண்டு வருகின்றன.

உத்தரபிரதேச மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் மற்றும் அமைச்சர்கள் இன்று புனித நீராடினர்.

முன்னதாக, மகாகும்பமேளாவை ஒட்டி உத்தரபிரதேச அமைச்சரவையின் சிறப்புக் கூட்டம், திரு. யோகி ஆதித்யநாத் தலைமையில் பிரயாக்ராஜில் நடைபெற்றது. 54 அமைச்சர்கள் இதில் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. யோகி ஆதித்யநாத், புதிதாக மூன்று மருத்துவக் கல்லூரிகளை தனியார் பங்களிப்புடன் ஏற்படுத்த இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக கூறினார்.

**Hathras, Baghpat** மற்றும் **Kasganj** ல் இந்த மருத்துவக் கல்லூரிகள் ஏற்படுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவத்தார்.

பிரயாக்ராஜ், வாரணாசி மற்றும் ஆக்ராவின் வளர்ச்சிக்கான பத்திரங்களை வெளியிடுவதற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

இதன்மூலம் இந்த நகரங்களில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரயாக்ராஜிலிருந்து அண்டை மாவட்டங்கள் மற்றும் பிற பகுதிகளுக்கான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கும் இந்த சிறப்பு அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாக திரு. யோகி ஆதித்யநாத் கூறினார்.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

**<<<<<<>>>>>>**

தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், நாளை முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிடவுள்ளதாக கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், தொல்லியல்துறை சார்பில் சென்னையில் நாளை நடைபெறும் நிகழ்ச்சியில் இந்த அறிவிப்பு வெளியிடப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக மாநில அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு வெளியிட்டுள்ள இவ்விழாவிற்கான அழைப்பிதழையும் முதலமைச்சர் பகிர்ந்துள்ளார்.

**<<<<<<>>>>>>**

ஆந்திரா மற்றும் தெலங்கானா உயர்நீதிமன்றங்களுக்கு கூடுதல் நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தெலங்கானா உயர்நீதிமன்றத்திற்கு திருமதி. **Renuka Yara,** திரு. **Narsing Rao,** திருமதி. **Tirumala Devi Eada,** திரு. மதுசூதன் ராவ் ஆகியோர் கூடுதல் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆந்திர உயர்நீதிமன்றத்திற்கு திரு. **Avadhanam Hari Haranadha Sarma** மற்றும் **Yadavalli Lakshmana Rao-**வும் கூடுதல் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

**<<<<<<>>>>>>**

மஹாராஷ்ட்ராவில் சட்டவிரோதமாக குடியேறிய பங்களாதேஷைச் சேர்ந்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசு, அம்மாநில அரசுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக உள்துறை அமைச்சகம் மகாராஷ்ட்டிர அரசுக்கு கடிதம் எழுதியுள்ளது.

மகாராஷ்ட்டிராவைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரிடமிருந்து பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் உள்துறை அமைச்சகம் இக்கடிதத்தை எழுதியுள்ளது.

**<<<<<<>>>>>>**

புதுதில்லியில் நடைபெற்ற சர்வதேச வாகன கண்காட்சியை எட்டு லட்சத்திற்கும் மேற்பட்டோர் பார்வையிட்டுள்ளனர்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இதில் பங்கேற்றன.

இந்த வாகன கண்காட்சி பார்வையாளர்களை மிகவும் கவர்ந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<<>>>>>>**

பெங்களூருவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Sahaja Yamalapalli** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-3, 3-6, 6-0 என்ற செட்கணக்கில் இங்கிலாந்தின் **Yuriko Lily Miyazaki**-யை வென்றார்.

மற்றொரு முதல் சுற்று ஆட்டத்தில் வெற்றிபெற்று அங்கிதா ரெய்னாவும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<>>>>>>**

நெதர்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச செஸ் போட்டியின் நான்காவது சுற்று முடிவில், இந்தியாவின் பிரக்ஞானந்தா முதலிடத்தில் நீடிக்கிறார்.

நான்காவது சுற்றில் அவர் **Leon Mendonca**-வை வென்றார்.

இதன்மூலம் மூன்றரை புள்ளிகளுடன் அவர் முதலிடத்தில் நீடிக்கிறார்.

**<<<<<<>>>>>>**

இந்தியா - இங்கிலாந்து இடையேயான முதலாவது டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டி சற்றுமுன் தொடங்கியது.

கொல்கத்தாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்து வீச தீர்மானித்ததை அடுத்து, இங்கிலாந்து பேட் செய்து வருகிறது.

**<<<<<<>>>>>>**

பேட்மிண்டன் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் ஜூனியர் பிரிவில் இந்தியாவின் **Bhagrav Ram Agreila – Viswa Tej Gobburu** இணை முதலிடத்தை பிடித்தது.

**<<<<<<END>>>>>>**